11

# வள்ளுவர் காட்டும் சூழலியல்

**முனைவர் த.பிரியா**
**உதவிப்பேராசிரியர், கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி**
**கோயம்புத்தூர்-641029**

**ஆய்வுச்சுருக்கம்**

இயற்கையை வெல்ல மனிதனால் முடியாது என்பதை மனிதன் உணர்ந்து வாழ்ந்தால் நன்மை பெருகும். நீர் இந்த உலகின் முக்கிய தேவை. நீரின்றி எந்த ஒரு செயலும் நடைபெறாது. எனவே வள்ளுவரின் கருத்துக்கள் இன்னும் கூடுதலாக நம்மை சிந்திக்க வைக்கிறது. மழை பெய்தால் மட்டுமே தரிசு நிலங்கள் கூட விலை நிலங்களாக மாறும். மனிதனின் எல்லா தேவைகளும் அப்பொழுதுதான் நிறைவடையும் என்ற சிந்தனையைத் திருக்குறளிலுள்ள சூழலியல் கருத்துகளுடன் விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

**திறவுச்சொற்கள்**

இயற்கை, கைமாறு, உதவி, மழையின் மேன்மை, வான்சிறப்பு, உயிர்கள், பஞ்சம், பசி, பட்டினி, பசுமை

**முன்னுரை**

திருக்குறள் தமிழுக்குத் தமிழர்களுக்குக் கிடைத்த மிகப்பெரிய அழியாச் செல்வம். திருக்குறள் ஒருமுக ஆடி. அதனில் உள்ளார்ந்து பார்க்கின்றவர்கள் எல்லோர் முகமும் தெரியும். ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் குறளில் சொல்லப்பட்டு இருப்பதைப் போன்று பொருத்திப் பார்க்கின்ற வகையில் நடந்து இருக்கும். அந்தச் செயல்களை "மேற்கொண்டு எப்படி எடுத்து செல்ல வேண்டும்?" என்ற அறிவு தெளிவை உணர்த்தும். வள்ளுவர் சூழலியல் சிந்தனையை எவ்வாறு வாழ்வியலுடன் எடுத்துச் செல்கின்றார் என்பதனை அவர் கூறிய குறள் வழி இயற்கையுடன் பொருத்திப் பார்ப்பதாக அமைகின்றது.

**இயற்கைக்குக் கைமாறு செய்தல்**

செய்நன்றி அறிதலிலிருந்து இயற்கை நமக்கு உதவி செய்து கொண்டு இருக்கிறது என்பதை நாம் அறியலாம். இயற்கை பற்றிய புரிதல் இல்லாமலும் இயற்கையின் மீது அன்பும் நேசிப்புத் தன்மையும் இல்லாமலும் அதனை அழித்துக் கொண்டு இருக்கிறோம். இறுதியில் நாம் தான்

அழிகிறோம். ஒருவர் செய்கின்ற உதவிக்கு இந்தப் பூமியையும் வானத்தையும் கொடுத்தாலும் ஈடாகாது என்பார்கள். ஏன் என்றால் மனிதன் இறந்து விடுவான் அதன் பிறகும் இந்த இயற்கை இருக்கும். எனவே அழிவே இல்லாத ஒன்றைக் கொடுப்பதுதான் செய்நன்றி என்று பொருள் கொள்ள வேண்டும். அத்தகைய இயற்கையைப் பாதுகாப்பது மனிதனின் தலையாயக் கடமையாக இருக்க வேண்டும்.

**செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்**

**வானகமும் ஆற்றல் அரிது (குறள் 101)**

**மழையின் மேன்மை**

மனிதனின் உணர்வு நிலைகளை உருவாக்கும் பல்வேறு வகையான எண்ணங்களின் ஊற்றாக திருக்குறள் அமைகிறது. மனதிற்கு மகிழ்ச்சியை உண்டாக்கும் கருத்துக்களைக் கொண்டது. ஒரு முறை படித்து முடித்த பின்பும், போதும் என்று புறக்கணிக்க முடியாமல் மீண்டும் மீண்டும் படிக்க வைக்கின்ற ஒரு மிகப்பெரிய சக்தியைக் கொண்டது திருக்குறள். மனித மனங்களைச் செம்மையுற செய்கின்ற எழுச்சிமிக்க கருத்துக்களைத் தன்னகத்தே கொண்டது. மனிதனைத் தவறு செய்யவிடாமல் நல்முறையில் நல்வழிப்படுத்தி, தவறு ஏதும் நடக்காமல் இருக்கும் வகையில் உள்ளத்தை உறுதியாக்கும் பண்பு திருக்குறளுக்கு உண்டு. எனவே மனித மனங்கள் உயர்வடைய வேண்டும் எனில் அவன் இயற்கையுடன் இணைந்து வாழ்ந்தால் மட்டுமே முழுமை பெறும். எனவே மழையின் வழி இயற்கையை இணைத்து மனிதர்களின் சிந்தனைகளைச் சீர்படுத்த வள்ளுவர் வழிவகை செய்கிறார். வள்ளுவரின் வான்சிறப்பில் மழை தவறாது பெய்தல் காரணமாக இந்த உலக உயிர்கள் அனைத்தும் வாழ்ந்து வருகின்றது. எனவே அந்த மழை உயிர்களுக்குச் சாவா மருந்து அமுதம் என்று சொல்கிறார் வள்ளுவர்.

**வான்இன்று உலகம் வழங்கி வருதலால்**

**தான் அமிழ்தம் என்றுணரற் பாற்று (குறள் 11)**

மழை பெய்யாமல் விட்டால் பஞ்சம் அதிகரிக்கும். அதனால் மனிதனின் அமைதியான வாழ்வியல் சிதையக்கூடும். எனவே உலக உயிர்கள் அனைத்துக்கும் பாகுபாடு இன்றி பொதுநிலையில் அனைத்து உயிர்களுக்கு உதவியாக இருக்கும் மழையை இந்த வகையில்தான் வள்ளுவர் கூறியிருக்கிறார்.

**துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்கு**

**துப்பாய தூஉம் மழை ( குறள் 12)**

என்று இயற்கையிலிருந்து பெறப்படும் மழை உண்பவருக்கு நல்ல உணவுகளை உண்டாக்கி, அது உருவாக காரணமாகி, அவற்றை உண்ணுகின்றவருக்குத் தானும் ஆஉணவாக அமைவது மழை. இயற்கையில் வருகின்ற மழை இந்த உலகிற்கு எவ்வளவு முக்கியம் என்பதைத் திருவள்ளுவர் தனது மற்றுமொரு குறளில் கூறுகிறார்.

**விண் இன்று பொய்ப்பின் விரி நீர் வியனுலகத்து**

**உள்நின்று உடற்றும் பசி (குறள் 13)**

மழை பெய்ய வேண்டிய காலத்தில் சரியாக பெய்யாமல் பொய்த்து விடுமானால் கடல் சூழ்ந்த பரந்த இவ்வுலகத்தில் பசி தோன்றி உயிர்களை எல்லாம் வருத்தும் என்பது இதன் வழி அறியப்படும் உண்மை. கடல் நீர் அதிக அளவில் இந்த உலகில் இருப்பினும் அதை நம்பி விவசாயம் செய்ய முடியாது. விவசாயம் நடைபெற வேண்டுமென்றால் மழை பொய்த்துப் போகாமல் பெய்ய வேண்டும். அப்படி செய்தால் மட்டும் விளைச்சல் இருக்கும். பஞ்சம், பசி, பட்டினி தோன்றாமல் இருக்கும் என்பதனை உணரும் வழி இயற்கையின் ஆற்றலை உணர முடிகிறது. மழை இல்லாமல் போனால் உழவர்கள் கலப்பைக் கொண்டு உழமாட்டார்கள். எனவே, உலகின் மிகப்பெரிய செல்வம் எல்லாச் செல்வங்களையும் வளங்களையும் உருவாக்கி தருவது மழை என்ற செல்வமே என்பதை மேலும் இக்குறளில் தெளிவுருகிறது.

**ஏரின் உழாஅர் உழவர் புயல் என்னும்**

**வாரி வழங்குன்றிக் கால் (குறள் 14)**

மழை பெய்யாமல் விட்டு மக்களைக் கெடுக்காது. மாறாக மழை பொதுநிலையில் பெய்து கெட்டவர்களையும் நல்வழிப்படுத்தி அவர்களை வாழ வைக்க வல்லது மழை.

**கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே**

**எடுப்பதூஉம் எல்லாம் மழை (குறள் 14)**

இன்னொரு குறட்பாவில் மேகத்தினிடமிருந்து மழைத்துளி விழாமல் போனால் புல்லின் பசுமையான தலையையும் காண முடியாது என்பதன் மூலம் வள்ளுவர் காட்டும் சூழலியலை உணர முடிகிறது.

**விசும்பின் துளிவீழின் அல்லல்மற் றாங்கே**

**பசும்புல் தலைக்காண்பு அரிது (குறள் 16)**

இயற்கையாக நடைபெறும் சூழலியல் சுழற்சி என்பது நடைபெற்று கொண்டே இருக்க வேண்டும் என்பதை இக்குறளின் வழி அறிய முடிகிறது.

**நெடுங்கடலும் தன் நீர்மை குன்றும் தடிந்தெழிலி**

**தான் நல்கா தாகி விடின் (குறள் 17)**

மேகம் கடலில் நீரை முகர்ந்து கொண்டு மீண்டும் அந்நீரையே மழையாகப் பெய்ய செய்யவில்லை என்றால் கடலில் உள்ள செல்வங்களுமே குறைந்து விடும் என்ற கருத்தின் மூலம் இயற்கையை அதன் செயல்பாட்டையும் சிறப்புற பதிவாக்கியுள்ளார். மனித குலம் தழைத்து ஓங்குவதற்குரிய ஒழுக்க நிலையையே மழை இல்லாவிடில் கெட்டுவிடும் என்பதை

**தானம் தவம்இரண்டும் தங்காவியன் உலகம்**

**வானம் வழங்கா தெனின் (குறள் 19)**

அதாவது மழை பெய்யாமல் போனால் இந்தப் பெரிய உலகத்தில் தானம் தவம் ஆகிய இவ்விரண்டும் நடைபெறாது. எந்த வகையால் உயர்ந்தவராக இருந்தாலும் நீர் என்பது இல்லாமல் இவ்வுலகில் வாழ முடியாது என்பதை உணர முடிகிறது. எனவே இயற்கை என்பது மிகப்பெரிய சக்தி.

**நெருநல் உளனொருவன் இன்றில்லை**

**என்னும்**

**பெருமை உடைத்து இவ்வுலகு (குறள் 336)**

என்ற குறளின் வழி நிலையாமையை உணரலாம். மனித வாழ்க்கை நிலையற்ற வாழ்க்கை. இந்த இயற்கை என்பது நிலையானது. எனவே நிலையற்ற மனிதன் நிலையான இயற்கையை அழிக்க முற்பட்டால் மனிதன் அழிவான். எனவே வாழ்க்கை உண்மையை உணர்ந்து அறத்தோடு செயல்படுதல் வேண்டும். மனிதன் வாழக்கூடிய வகையில் ஒரு நாடு சிறந்து விளங்க வேண்டுமென்றால் அதற்கு இயற்கையும் வழிவகை செய்தல் வேண்டும் என்பதை,

**இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்**

**வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு (குறள் 737)**

தேநீர், மேல்நீர் எனப்பட்ட இரு தண்ணீரும் மழையும் அதிலிருந்து புறப்பட்டு வருகின்ற நீரும்

அழியாத சிறந்த ஆட்சி செய்யும் கோட்டையும் நாட்டிற்கு உறுப்புகள் ஆகும். அதாவது இயற்கையும் அந்த இயற்கையைப் பாதுகாத்து வருகின்ற நாடும் தான் நாட்டோட வளர்ச்சியில் முக்கிய பங்கு பெறும் நாடாக ஏற்றுக் கொள்ளப்படும்.

**தொகுப்புரை**

வள்ளுவன் வழி நின்று அவரது கருத்துகளை உணர்ந்து வாழ்ந்தால் வாழ்க்கை இனிமை பெறும். வள்ளுவன் சிந்தனையை வகுத்துக் கொண்டு வாழ்கின்றவர்கள் வாழ்வில் முழு வெற்றி அடைவார்கள். இயற்கை என்பது எப்படி இந்த உலகில் பொதுவாக இருக்கிறதோ அதைப் போன்று வள்ளுவன் குறள்கள் அனைத்தும் எல்லோருக்கும் பொதுவானது. மனிதன் அடுத்தடுத்த நிலைகளுக்குத் தங்கள் வாழ்க்கையைக் கொண்டு சென்று உயர்வதற்கு இயற்கை பெரும் துணை நிற்கும். இந்த அறிய தத்துவத்தை வள்ளுவன் வாக்கு நமக்கு உணர வைக்கிறது. திருக்குறளில் இயற்கை குறித்த பதிவுகளானது இயற்கையின் செயல்பாடானது எல்லா உயிர்களுக்கும் பாகுபாடன்றி கிடைக்கும் ஓர் உன்னத சக்தி என்பதை உணர வைக்கிறது. மழை நீர் எத்துணை தூய்மையானதோ அதேபோன்று வள்ளுவரின் குறள்கள் படிக்க படிக்க மனித மனங்களைத் தூய்மை அடைய செய்யும் என்பது நாம் இக்கட்டுரையின் வழி உணர முடிகிறது.

**முடிவுரை**

வள்ளுவனின் குறள்களை அடுத்தடுத்த தலைமுறைகளுக்குக் கொண்டு சென்று அவர்களைப் பக்குவப்படுத்துவது நமது கடமை என்பதை உணர வைக்கும். எனவே அடுத்த தலைமுறைகளுக்கு வள்ளுவரின் குறள் வழி நிற்க வேண்டும் என்று சொல்கின்ற பொழுது அந்தக் குறளின் வழி நாமும் நிற்க வேண்டி இருக்கிறது எனவே திருக்குறளின் இயக்கம் இயங்கிக் கொண்டே இருக்கும் மனித மனங்களில் அடுத்தடுத்த தலைமுறை கொண்ட சிந்தனைகளைப் பக்குவப்படுத்துகிறது என்பதை இந்தச் சூழலியல் கட்டுரை மூலம் அறியலாம்.

**துணை நின்ற நூல்கள்**

1. முனைவர் இராம. சுந்தரம், முனைவர் செ. பழனிச்சாமி, முனைவர் சா. கிருட்டினமூர்த்தி ( பதிப்பாசிரியர்கள்), இலக்கியமும் அறிவியலும், அனைத்திந்திய அறிவியல் தமிழ்க் கழகம், தஞ்சாவூர்-613 010, 2008
2. க.ப. அறவாணன், திருவள்ளுவம், தமிழ்க்கோட்டம் 2, முனிரத்தினம் தெரு அய்யாவு குடியிருப்பு அமைந்தகரை சென்னை – 600 029, அக்டோபர் 2008

3. சி. இராஜேந்திரன், திருக்குறள் உவமைநயம், கவிதா பப்ளிகேஷன், தபால் பெட்டி எண்:6123, 8, மாசிலாமணி தெரு, பாண்டி பஜார், தி.நகர், சென்னை – 600 017, செப்டம்பர் 2009

சென்னை 6

**நான் கண்ட முடிவு**

இயற்கையை வெல்ல மனிதனால் முடியாது என்பதை மனிதன் உணர்ந்து வாழ்ந்தால் நன்மை பெருகும். நீர் இந்த உலகின் முக்கிய தேவை. நீரின்றி எந்த ஒரு செயலும் நடைபெறாது. எனவே வள்ளுவரின் கருத்துக்கள் இன்னும் கூடுதலாக நம்மை சிந்திக்க வைக்கிறது. மழை பெய்தால் மட்டுமே தரிசு நிலங்கள் கூட விலை நிலங்களாக மாறும். மனிதனின் எல்லா தேவைகளும் அப்பொழுதுதான் நிறைவடையும்.